# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre Homebush Inc.
PO Box 4032, Homebush, NSW 2140.

www.tsch.org.au
homebushtsch@gmail.com


## பேச்சுப் போட்டி 2025 ஆண்டு 8

அனைவருக்கும் வணக்கம்

### நான் விரும்பும் கவிஞர் பாரதிதாசன்

உலகம் போற்றும் செம்மொழிகளில் ஒன்று நம் தமிழ்மொழி. அதனை வளப்படுத்தியவர்கள் அறிவுடைப் புலவர்களும் நாவன்மை மிக்க நல்லறிஞர்களும் கவிஞர்களும் ஆவர். தமிழ்மொழிக்கும் தமிழ் சமூகத்துக்கும் ஏற்றம் தரும் கருத்துகளைக் கவிதை வடிவில் தந்தவர்களில் குறிப்பிடத் தக்கவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். அவரே நான் விரும்பும் கவிஞர் ஆவார்.

"**தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**" என்று முரசு கொட்டியவர் பாரதிதாசன். எளிய தமிழில் எண்ணற்ற கவிதைகள் படைத்தவர். தமிழின் உயர்வுக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்தவர். தமிழ் நாட்டைப் பெருமைப்படுத்திய பாரதியாரின் எண்ணங்களை எம் இதயங்களில் ஏற்றியவர்.

பாவேந்தர் பாரதிதாசன் 1891ஆம் ஆண்டு ஏப்பிரல் 29ஆம் நாள் இந்தியாவிலுள்ள புதுச்சேரி என்னும் இடத்தில் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சுப்புரத்தினம். பாரதியார் மீது கொண்ட பற்றினால் தனது பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். பாரதிதாசன் தமிழ்ப் பற்றும் தமிழின உணர்வும் கவியாற்றலும் மிக்கவர். அவருக்கிருந்த மொழியறிவு, இசையுணர்வு, சமூக சீர்திருத்தச் சிந்தனை என்பன அவரைப் புரட்சிக் கவிஞராக மாற்றின.

"**கொலை வாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே**" என்று அவரது பாடல்கள் கொடுமையைக் கண்டு வெகுண்டு எழத் தூண்டின. ஆசிரியராகப் பணி தொடங்கிய பாரதிதாசன் எழுத்தாளர், கவிஞர், திரைப்படக் கதாசிரியர், அரசியல்வாதி என்று பன்முகங்கொண்டு பணியாற்றினார். பாரதிதாசனது படைப்புகளில் பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பெண்கள் விடுதலை என்பன மிகச் சிறப்பானவை.

தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இவர் ஆற்றிய சேவை மகத்தானவை. பாரதிதாசனது கவிதைகளைப் படித்து, அவரது பணிகளைப் போற்றி நாமும் தமிழ் வளர்ப்போம்.

நன்றி

வணக்கம்